மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண்.164/2020

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் வா.சா.1.

---

பெயர். - திரு.பர்வதானந்தம்
த/பெ. - திரு.ராயங்கலதனுஷ்கோடி
கிராமம் - முக்கூட்டுமலை
தொழில் - இல்லத்தரசி
தாலுகா - கோவில்பட்டி
வயது - 71

1872-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2025-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 03-ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை.-

1) நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை வாதி தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 23.05.1977 ம் தேதியிட்ட 2 ம்தபசில் சொத்திற்குரிய வாதியின் முன்பாத்தியஸ்தர் அய்யலுசாமி நாயக்கர் பெயரில் உள்ள கிரைய ஆவணம் **வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 2 | 23.02.1981 ல் 2 ம்தபசில் சொத்திற்குரிய வாதியின் பெயரில் வழங்கப்பட்ட UDR திட்டத்தின்படியான அறிவிப்பு மற்றும் பட்டா அசல் **வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 3 | 03.06.1985 ல் 2 ம்தபசில் சொத்திற்குரிய தற்போதைய கணினி பட்டா **வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 4 | 2 ம்தபசில் சொத்திற்கு செலுத்தப்பட்ட தீர்வை ரசீதுகள் எண்ணம் 4 **வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 5 | 07.04.2020 ம் தேதியிட்டு பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு **வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 6 | பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 7 | தபசில் சொத்திற்கு வாதி பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் அசல் **வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறுதேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
03.03.2025